**செய்தி வெளியீடு எண்.391** **நாள்.27.5.2008**

ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர்க்கும் நாள் !

**உணவுத் துறை மானிய கோரிக்கை அன்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ வேலு அவர்களின் புதிய அறிவிப்பின்படி தாம்பரம் மண்டலத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தினை முதன் முதலாக துவக்கி வைத்தார்கள்**

சட்ட மன்றப் பேரவையில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உணவுத் துறையின் மானிய கோரிக்கையன்று அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளில், 5வது அறிவிப்பான வட்ட அளவில் மக்கள் குறை தீர்க்கும் கூட்டங்கள் நடத்தப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை தாம்பரம் மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும்பொருட்டு தாம்பரம் மண்டலம், மேடவாக்கம் அரசினர் மாதிரி நடுநிலைப் பள்ளியில் இன்று (27.05.2008) காலை 10.00 மணிக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தினார்கள்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் 30 புதிய குடும்ப அட்டைகளை விண்ணப்பதாரர்களுக்கு வழங்கினார்கள். அங்கு கூடியிருந்த பொது மக்களிடம் விசாரணை செய்து அவர்கள் கொடுத்த மனுக்களை பெற்றுக்கொண்டு, மனுக்கள் பெறப்பட்டதற்கான ஒப்புகை சீட்டும் உடனடியாக வழங்கினார்கள். இனி வருங்காலங்களில், சென்னையில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வாரத்தில் சனிக்கிழமையன்றும், மாவட்டங்களில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வாரத்தில் வெள்ளிக்கிழமையன்றும் காலை 10.00 மணியளவில் இத்தகைய குறை தீர்க்கும் கூட்டங்கள் நடைபெறும் என்றும், சென்னை நகரைப் பொறுத்தவரை மண்டலத்திலுள்ள ஏதேனும் ஒரு பகுதியில் பொது இடத்தில் வைத்தும், மாவட்டங்களில் அந்தந்த வட்டத்திலுள்ள ஏதேனும் ஒரு கிராமத்தில் ஊராட்சி அலுவலகம் அல்லது கிராம நிர்வாக அலுவலக கட்டிடத்தில் மக்கள் குறைதீர் கூட்டங்கள் நடைபெறும். அடுத்த மாதத்தில் நடைபெறும் குறைதீர்க்கும் கூட்டம், நடத்தப்படும் நாள், இடம், ஆகியவை ஒவ்வொரு மாதமும் 25–ம் தேதிக்குள் சென்னையில் துணை ஆணையரும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரும் செய்தி அறிக்கை வெளியிடுவார்கள். இக்கூட்டம் மாவட்ட வழங்கல் அலுவலர், துணைப்பதிவாளர்(பொ.வி. திட்டம்) மற்றும் கூட்டுறவு சார் பதிவாளர்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் அல்லது மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் உயர் அலுவலர்கள் (வட்டத்திற்கு ஒரு உயர் அலுவலர்) தலைமையில் நடத்தப்படும். அப்போது பொது மக்களால் புதிய குடும்ப அட்டை வேண்டி கொடுக்கப்படும் மனுக்கள் 60 நாட்களிலும், விலாசம், மண்டலம் மற்றும் மாவட்ட மாற்றங்கள் 7 நாட்களிலும், பெயர் நீக்கம் மற்றும் பெயர் சேர்த்தல் போன்றவை 3 நாட்களிலும் தீர்வு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்கள். மேலும், குடும்ப அட்டை வழங்குதல் மற்றும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் பெறுவதில் இடர்பாடுகள் இருப்பின் அவைகள் இக்குறைதீர்ப்பு கூட்டங்கள் வாயிலாக உடனுக்குடன் விசாரணை செய்து தீர்வு செய்யப்படும் என்று தெரிவித்தார்கள்.

தாம்பரம் மண்டலத்தில் உள்ள 122 நியாயவிலைக் கடைகளிலும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் உரிய அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் அவர்களுக்கு தேவையான பொருட்களை உரிய அளவில் பெற்றுக் கொள்ளலாம். அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் குறைவாக வழங்கப்பட்டாலோ, எடை குறைவாக வழங்கப்பட்டாலோ, அது குறித்து சென்னை நகரில் துணை ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கும், மாவட்டங்களில் மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கும் புகார் தெரிவிக்கலாம். பொது மக்களால் தெரிவிக்கப்படும் புகார்கள் உடனுக்குடன் விசாரணை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உணவு அமைச்சர் அலுவலகத்திற்கும் பொது மக்கள் புகார் தெரிவிக்கலாம். புகார் தெரிவிப்பதற்கான தொலைபேசி

மற்றும் தொலையச்சு எண்கள் ஏற்கனவே பத்திரிகை வாயிலாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக தாம்பரம் பகுதி வாழ் மக்கள் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களுக்கு புகார்களை தெரிவிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. | துணை ஆணையர் (தெற்கு) | 28551026 |
| 2. | உணவு அமைச்சர் அலுவலகம் | 25670204 |

தொலைபேசி மற்றும் தொலையச்சு மூலம் புகார்களை தெரிவிக்க இயலாதவர்களிடம் அவர்களுடைய குறைகளை கேட்டு தீர்வு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத் துறை விரிவடைந்து தாம்பரம் பகுதியில் தான் கால் செண்டர்கள், TCS, WIPRO, TATA CONSULTANCY, COGNIZANT, INFOSIS போன்ற நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்த நிறுவனங்களில் பல மாநிலங்களை சேர்ந்தவர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு பாஸ்போர்ட் பெறவும், எரிவாயு இணைப்பு பெறவும் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பிப்பார்கள். அவர்களுக்கெல்லாம் உடனடியாக குடும்ப அட்டை வழங்க வேண்டும். அதே நேரத்தில் அவர்கள் மாறுதலாகி வேறு மாநிலங்களுக்கு சென்று விட்டால் அத்தகைய குடும்ப அட்டைகளை சமூக விரோதிகள் பயன்படுத்தாமல் ரத்து செய்யவும் நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் தேவையில்லை என கருதும் குடும்பங்கள் எரிவாயு இணைப்பு பெறுவதற்காக மண்டல அலுவலகங்களில் பொருள் வழங்கா அட்டை (None Card) பெற்றுக் கொள்ளலாம்.

இதுவரை கைவண்டி மூலம் மண்ணெண்ணெய் விற்றுக்கொண்டிருந்த 13 விற்பனையாளர்கள் அந்தந்த பகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகளுடன் இணைக்கப்–பட்டுள்ளார்கள். இவர்கள் ஜுன் 1–ம் தேதி முதல் நியாயவிலைக் கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குவார்கள். இவர்கள் மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதில் ஏதேனும் குறைபாடுகளை கண்டாலும், அதனையும் மேற்கண்ட தொலைபேசி எண்களுக்கு புகார் தெரிவிக்கலாம்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ராஜா, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. கே. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர், திரு.கே.பணீந்தர் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையர் (தெற்கு), திரு.சண்முகநாதன் தாம்பரம் மண்டல நிர்வாக அலுவலர் திரு.எஸ். அப்துல் காதர், காஞ்சிபுரம் மண்டல இணைப்பதிவாளர், சார் பதிவாளர்கள், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் தனி அலுவலர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்கள் பங்குபெற்றனர்.

**மாண்மிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின்**
**சிறப்பு நேர்முக உதவியாளர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9